# MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME – III ISSUE - I

AUG -2025 E-ISSN : 2584 – 1238

## திருக்குறளில் - நட்பு அறம்

**முனைவர் பொ.ஜான்சி,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,

பசுமலை, மதுரை. - 9751284876, jansisrinivasan456gmail.com

DOI 10.5281/zenodo.16432416.

Abstract :

The society at the time of the emergence of Thirukkural can be described as a society defined by the principle of morality. Because this book has classified the good and bad of life and formulated and compiled the norms of life that were acceptable to many people in the society, especially the learned, the wealthy, the upper class, and the farmers. Following this, many moral books that described the methods related to morality as socially acceptable morals, behaviors, and justice systems emerged during this period. The moral rules presented by the Hindus are mostly acceptable. However, a few ideas create problems in the thinking about social personality. This article is an examination of the principles.

KeyWords : Thirukural - Ethics - Rules - Society - Principles

திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்த சமூகத்தை அறக்கொள்கையால் வரையறுக்கப்பட்ட சமூகம் எனக் குறிப்பிடலாம். ஏனெனில் இந்நூல் வாழ்வின் நன்மை, தீமைகளை இனம்பிரித்துக் காட்டிச் சமூகத்தவரில் குறிப்பாகக் கற்றறிந்தோர், செல்வந்தர், உயர்குடி மக்கள், விவசாயிகள் எனப் பலரும் ஏற்கும்படியான வாழ்க்கை நெறிமுறைகளை, வகுத்தும் தொகுத்தும் கூறியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து அறம் தொடர்பான வழிமுறைகளையே சமூகத் தகுதி வாய்ந்த ஒழுக்கங்களாகவும் நடத்தைகளாகவும் நீதிமுறைகளாகவும் எடுத்துக்கூறிய பல அறநூல்கள் இக்காலக்கட்டத்தில் தோன்றியவை. இந்நூல்கள் முன்வைத்த ஒழுக்க விதிகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவே உள்ளன. எனினும் ஒருசில கருத்துக்கள் சமூக ஆளுமை குறித்த சிந்தனையில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. அச்சிக்கல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### முன்னுரை

திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்த சமூகத்தை அறக்கொள்கையால் வரையறுக்கப்பட்ட சமூகம் எனக் குறிப்பிடலாம். ஏனெனில் இந்நூல் வாழ்வின் நன்மை, தீமைகளை இனம்பிரித்துக் காட்டிச் சமூகத்தவரில் குறிப்பாகக் கற்றறிந்தோர், செல்வந்தர், உயர்குடி மக்கள், விவசாயிகள் எனப் பலரும் ஏற்கும்படியான வாழ்க்கை நெறிமுறைகளை, வகுத்தும் தொகுத்தும் கூறியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து அறம் தொடர்பான வழிமுறைகளையே சமூகத் தகுதி வாய்ந்த ஒழுக்கங்களாகவும் நடத்தைகளாகவும் நீதிமுறைகளாகவும் எடுத்துக்கூறிய பல அறநூல்கள் இக்காலக்கட்டத்தில்



http://Creativecommons.org//license/by/4.0/.

தோன்றியவை.

**ஆளுமை சமரசம்**

இந்நூல்கள் முன்வைத்த ஒழுக்க விதிகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவே உள்ளன. எனினும் ஒருசில கருத்துக்கள் சமூக ஆளுமை குறித்த சிந்தனையில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. சான்றாக, நற்குடிப்பிறந்தோரது பண்பு மரபுவழியாகப் பண்பட்டதாகவே என்பதையும் பெண்களுக்கு இருக்கும் இல்லத்தைத் தாண்டிச் செல்வதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருப்பதையும் ஆடவரின் ஆண்மை குறித்த வரையறையில் முரண்பாடு இருப்பதையும் சூழலுக்கேற்ப நடந்துகொள்ள வலியுறுத்துவதையும், பிறப்பு, கல்வி முதலானவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் சுட்டப்படுவதையும், அரசனின் அரியாண்மையில் இருவேறு தன்மைகள் இருக்கவேண்டிய இயல்பையும் குறித்துத் திருவள்ளுவர் பேசும் இடங்கள் சிந்திக்கத்தக்கன. இவற்றால் மனித ஆளுமையில் சிலவேளை சமரசம் காணவேண்டியது தவிர்க்கமுடியாததாகிறது. எனவே ஒருமனிதன் தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்வதற்குச் சூழலுக்குத் தகுந்தவாறு இறுக்கமான நிலையிலிருந்து நெகிழ்வாக்கிக் கொள்ளலாம் என்கிறார் வள்ளுவர். இதனை 'ஆளுமைச் சமரசம்' எனலாம்.

**வாய்மையில் சமரசம்**

பொய் பேசாதிருப்பது மிகச்சிறந்த அறமென்றும் சான்றோர்க்கு அது அழகு என்றும் மானிடர்க்குப் புகழைத் தருவது என்றும் பலவாறு விளக்கம் தருகிற வள்ளுவர் 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' என்று சூழலுக்குத் தகுந்தவாறு அதாவது நன்மை பயக்கும் வகையில் பொய் கூறலாம் என்கிறார். இக்குறளுக்கு விளக்கம் தரும் பரிமேலழகர், **"தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை எனவும், நன்மை பயவாத நிகழ்ந்தது கூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது"** என்கிறார். இதனால் நன்மை பயக்குமாறு பொய் கூறுவது தவறில்லை என்ற சமரசமான கருத்து முன்வைக்கப்படுவதை உணரலாம்.

**நண்பனின் ஆளுமை**

மனித உறவுகளில் ஒருவர்மீது மற்றொருவர் மனவிருப்பத்துடன் நட்பு பாராட்டி வாழ்கின்ற வாழ்க்கை இனிமை செய்வது. நட்புக் கொள்ளுவதன் வழியாக மனித சமூகம் பகை நீங்கி மகிழ்வுடன் வாழ இயலும் எனத் திருவள்ளுவர் கருதியுள்ளார். அதன் பயனாகவே நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு. கூடா நட்பு என்று பல அதிகாரங்களை நட்புச் செய்வதற்காகவே வகுத்துப் பல வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார். மனித உறவுகளில் உண்மையான நட்பு எது? போலியான நட்பு எது? என்பதை இவர் இனம் பிரித்துக் காட்டியுள்ளார். அதுமட்டுமின்றி நட்பின் இலக்கணம் கூறி இவ்வகையில் நட்புக் கொள்கின்ற மனிதர் ஆளுமைப் பண்பு நிறைந்த நண்பர்கள் என்றும் புரிந்துகொள்ள வகை செய்கிறார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238


இரு மனிதருக்கிடையிலாக நட்பு உருவாவது என்பது மிகவும் அரியது. அவ்வாறு நட்பு ஏற்படின் அதுபோல் பாதுகாப்பானது எதுவுமில்லை. என்கிறார் வள்ளுவர். இதனால் நட்பினைப் பெறுதல் அல்லது உருவாக்குதல் என்பது எளிய செயலன்று என்பதை உணரலாம். இவர் நட்பினை அறிவுடையார் கொள்ளும் நட்பு என்றும் பேதையர் நட்பு என்றும் இருவகையாகப் பிரித்துக் காண்கிறார். பண்பாளர்களுக்கிடையிலான அல்லது அறிவுடையவர் நட்பு புதிய புதிய நல்ல தகவல்களைப் பெறுவதற்கு ஏதுவாகவும் துன்பம் வரும் காலங்களில் உதவுவதாகவும் மானங்காப்பதாகவும், பெருமை சேர்ப்பதாகவும் நிலவின் வளர்ச்சிபோல விளங்கும் என்றும் அதேவேளை, நிலவின் முழுமை தேய்வதுபோல வெறுமனே சிரித்து மகிழ்வதற்காகவும் தீயவழிக்கு உட்படுத்தும் வகையில் பாராட்டுரை நல்கியும் மிகவும் இனிய நட்பாகப் பேதையார் நட்பு பார்க்கத் தோன்றும் என்றும் விளக்குகிறார். இங்ஙனம் நட்பின் கூறுகளை செயல் அடிப்படையில் விளக்கும் திருவள்ளுவர் அதன் மையக்கருத்தாகப் புணர்ச்சி x உணர்ச்சி என்பவற்றிக்கிடையிலான மாறுபாட்டைக் காட்டுகிறார்.

**“புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும்”** (785)

என்ற குறள் இதனை விளக்கி நிற்கும். இதன் நுட்பம் யாதெனில் புணர்ச்சி இரண்டு உருவம் ஓருருவமாதலைக் குறிக்கும். உடல் ஒன்றுதல்போல எனவும் இதனைக் கொள்ளலாம். ஆனால் உணர்வுமிக்க நட்பு என்பது உயிருடன் கலந்திருக்கிற நட்பாகக் கருதத்தக்கது. இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை செய்யுமிடத்துப் பின்வருமாறு கூறுகிறார். **“புணர்ச்சி ஒரு தேயத்தாராதல்... பழகுதல்-பலகாற் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டுமின்றிக் போல கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் உணர்ச்சியொப்பின், அதுவே உடன்உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி. பழகுதல், உணர்ச்சியொத்தல் என்னுங் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனால் கூறப்பட்டது”** என விளக்குகிறார். எனவே நண்பருக்காக உயிரை விடவும் துணிகிற உணர்வுடைய மாந்தரே

ஆளுமைமிக்க நண்பராவார். மேலும், மனிதர்கள் வெளிப்பேச்சுக்காகவும், பழகி மகிழ்வதற்காகவும் தம்மை நண்பர் என்று கூறிப் பெருமைப்படுவதில் பொருளில்லை. முகநக நட்பதல்லாமல் அகநக நட்பதும், நண்பனின் இடுக்கண் களைவதும், தவறு செய்யும் காலத்து இடித்துரைப்பதும் எனப் பல நற்குணங்களைப் பெற்றிருக்கும் நண்பர் உணர்ச்சிமிக்க நட்பினால் அவற்றை வெளிப்படுத்துகின்றனர்.

நட்புக் கொள்வோர்க்கிடையில் வேற்றுமை கிடையாது. ‘எனது ஆருயிர் நண்பர் இவர் என்றும், அவர்முன் நான் தூசு’ என்றெல்லாம் நண்பரைப் பிறர்முன் அறிமுகம் செய்வது நட்பில் வேறுபாடுடையதாகும். அவ்வாறான வேளைகளில் நட்பு சிறுமைப்படுவதாயிருக்கும் என்கிறார் வள்ளுவர். இதனால் ஒருவருக்கொருவர் ஆத்மார்த்தமாக, மிகவும் நுட்பமாக உயிரில் கலந்த நட்பினை வேறுபாடின்றிக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இவண் வேண்டப்படுவதாகும். **"உடம்பொடு**



http://Creativecommons.org//license/by/4.0/.

**உயிரிடை நட்பு போன்றது மடந்தையொடு கொள்ளும் காதல்"** என்று காதலனொருவனின் கூற்றைத் திருக்குறள் பதிவு செய்துள்ளது. நட்பு அகத்திற்குள்ளாக நூல்இழைபோலக் கட்டப்படுவது; துன்பத்தில் வருந்துவது; உருகுவது; மகிழ்வில் திளைப்பது; எந்த நிலையிலும் அறவயப்பட்ட சிந்தனையிலிருந்து தவறாதிருப்பது ஒருவருக்கொருவர் தம்மை நண்பர் என்று புறவயமாகக் காட்டிக் கொள்வதில் நட்பு சிறப்பதில்லை. உள்ளுணர்வால் ஒருவருக்கொருவர் தம்மை ஈந்து வாழ்கிற செயல்முறையிலான நட்பே சிறந்தது.

மேற்கூறியவற்றால் மனிதர் தமக்குள் அறிமுகமாகிப் பழகிப் பேசி மகிழ்வதோடு நின்றிடாமல் நண்பனின் உள் உணர்வோடு கலந்து அவனது இன்ப, துன்பங்களில் பங்கெடுத்து அவனைத் தானாகவே உணர்ந்து நட்பைப் பிறர் இகழும்படியாகச் செய்திடாமல் உயிர் உள்ளவரை காத்து நடப்பவனே நண்பரில் ஆளுமைமிக்கவனாவான். நண்பரின் ஆளுமை என்பது அவனது செயலில் உயிர் பெறுகிறது.

மேலும் திருவள்ளுவர் கருத்துப்படி நட்பு என்பது இருவர் தொடர்பானது. எனவே இருவருமே தமது நட்பைப் பேணிக் காப்பதில் சிரத்தை மேற்கொள்ள வேண்டுமென்கிற கருத்தும் பெறப்படுகிறது. நட்புக் கொள்ளுதல் என்கிற செயல்வழியாகவும் மனித சமூகத்தை மேன்மையுறச் செய்ய இயலும் என வள்ளுவர் நம்புகிறார்.

**வீரரின் ஆளுமை**

முடிமன்னர் காலத்துப் போர் மறம் குறித்து திருவள்ளுவர் மிகச்சிறப்பாகக் கூறியுள்ளார். ஒருநாடு நிலைத்து இருப்பதற்கு நிலைத்த பாதுகாப்பு மிக இன்றியமையாதது ஆகும். நாட்டைப் பாதுகாக்கின்ற செயலில் படைவீரர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். போர்வீரர்களின் ஆளுமை எக்காலத்திற்கும் வேண்டப்படுவதாகவே இருக்கிறது. கட்டளையிடுபவராக இருக்க வேண்டும். அவன் ஆணையைப் பெண் ஏற்று நடத்தல் வேண்டும் என்கிற வரையறையை உணரலாம். ஏவல்செய்து வாழும் கணவன் வெட்கமில்லாதவன், அப்படிப்பட்டவனை விட நானமுள்ள பெண் உயர்வானவள் என்றும் ஆடவர் பெண்மேல் ஆதிக்கம் செலுத்துகிற கருத்துக்களைச் சமூகத்திற்குப் போதிக்கும் வள்ளுவர் சமணம் தோய்ந்த குடும்ப அறத்தை நிறுவுகிறார். அக்காலத்து நடைமுறைக்கேற்பப் பெண்களைப் பின்நிறுத்தியும் ஆடவரை முன்னிறுத்தியும் குடும்பத்தில் ஆடவருக்குரிய ஆண்மை என்கிற நிலையில் பெண் மோகம் தவிர்த்தல், அவளுக்கு அஞ்சாதிருத்தல் அல்லது அவளை அச்சுறுத்தல், அவளது ஏவலுக்கு அடிபணியாதிருத்தல் அல்லது அவளை அடிபணியச் செய்தல் என வகைபிரித்து விளக்குகிறார்.

மேற்குறித்த இடங்கள் அன்றி இன்னும் பல இடங்களில் அரசியல் தந்திரங்களுக்குரிய ஆளுமைப்பண்புகளாக அறக்கொள்கைக்கு மாறான செய்திகள் குறளில் இடம்பெற்றுள்ளன. இவை அரசு நிர்வாகத்திற்குரியதாகக் கூறப்பட்டாலும் நடைமுறை மனிதர்கள் தம் குடும்ப நிர்வாகத்திற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் சந்ததிப் பெருமையைத் தக்கவைக்கச் சூழலுக்கேற்ப நடக்கும்


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

நடத்தைமுறைகள், பொருள் ஈட்டலில் வேண்டடப்படும் அறிவுகள் என எண்ணிறைந்த செயல்பாடுகளில் அரசியல் எந்திரம் வேண்டப்படுகிறது. அவ்வேளை அவர் அர்த்தசாத்திரக் கொள்கைப்படி வாழ்ந்துகொள்வது அறஆளுமையின்படி சிக்கலை ஏற்படுத்தவே செய்யும். திருக்குறள் போன்ற நீதிநூல்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என நாற்பொருளை விளக்குகையில் மனிதர்களை அன்புகொண்டோராகவும் ஆற்றல் மிக்கோராகவும் அறநெறி பிறழாத ஒழுக்கம் கொண்டோராகவும் இருக்கும்படி பணிக்கின்றன. ஆயின், மனிதர் இடம், காலம், சூழலுக்கேற்பத் தம் பண்பினை மாற்றி அமைத்துக்கொண்டு வாழ்கின்றனர். 'இது மிகச்சிறந்த மக்கட்பண்பு' எனச் சுட்டக்கூடிய அறவழிப்பட்ட மாந்தரை இனங்காண்பதற்குப் பதிலாக அறஆளுகைக் கருத்தியல் வழிப்பட்ட மாந்தரை இனங்காண வழி செய்வதாக உள்ளது.

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை ஆதாரம்**

1. பரிமேலழகர்., திருக்குறள் பரிமேலழகர் உரை, ராம் பிரசுரம், சென்னை. முதற்பதிப்பு, டிசம்பர் 2003.

**துணைமைச் சான்றாதாரங்கள்**

1. புலியூர்க்கேசிகன், (ப.ஆ.), திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னைன-8. ஏழாம் பதிப்பு, 2004.
2. அருணாசலம், குறளின் செய்தி, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு. 1968.
3. அருணை வடிவேலு முதலியார்,சி., தெய்வப் பனுவல்களில் திருக்குறள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், முதற்பதிப்பு. 1992.
4. பரிமேலழகர், (உ.ஆ.), திருக்குறள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1967.
5. அழகரடிகள், தவத்திரு., திருக்குறள் அறம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1970.
6. ராஜ்கௌதமன்
7. அருண் சுப்பிரமணியம், (தொ.ஆ), இலக்கணமும் ஆளுமைகளும், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி. முதற்பதிப்பு, 2007.
8. அகமுடைநம்பி, க.சி., (ப.ஆ), திருக்குறளில் பெண்ணியம், கருத்தரங்கம் ஆய்வுக்கட்டுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், முதற்பதிப்பு, 2006.



http://Creativecommons.org//license/by/4.0/.